செ.வெ.எண்: 21 நாள்: 12.12.2016

# பத்திரிகைச் செய்தி

## நெல் (சம்பா) பயிருக்கு காப்பீட்டுத் தவணைத் தொகை செலுத்துவதற்கு விவசாயிகளுக்கு மேலும் கால அவகாசம் நீட்டிப்பு:

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் நடப்பு 2016-17 -ஆம் ஆண்டு நெல் - II (சம்பா) பயிருக்கு காப்பீட்டு தவணைத் தொகை செலுத்துவதற்கான காலக்கெடு 14.12.2016 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்த்லைவர் திரு.சு.கணேஷ், அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காப்பீட்டுத் தவணைத் தொகை (பிரிமியம்) செலுத்துவதற்கான காலக்கெடு 04.12.2016 என நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. தற்போது மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி காப்பீட்டு தவணைத் தொகை செலுத்துவதற்கான காலக்கெடு 14.12.2016 வரை நீட்டிக்கப்பட்டு உள்ளது. ஆகவே சம்பா நெல் சாகுபடி செய்து இதுவரை பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் உடன் தங்கள் பகுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கி கிளைகளில் அணுகி ஏக்கருக்கு ரூ.345/- பிரிமியத் தொகை மற்றும் நிலம் தொடர்பான ஆவணங்களை (சிட்டா / அடங்கல் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சான்று) சமர்ப்பித்து 14.12.2016-க்குள் பயிர் காப்பீடு செய்து பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**